சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண்.118/2010

**DW 3 சரவணக்குமார்** **03.03.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 12 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ஆதியில் தாவா சொத்துக்கள் ராமசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். ராமசாமி கவுண்டர் தாவா சொத்துக்களைப் பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்கவில்லை என்றால் சரிதான். வாரிசு அடிப்படையில் ராமசாமி கவுண்டரின் வாரிசுகளுக்கு சொத்துக்கள் பாத்தியம் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனாரும், என் தகப்பனாரின் சகோதரர்களும் சேர்ந்து ஏற்படுத்திக்கொண்ட 01.10.1993 தேதியிட்ட பாகப்பத்திரத்தில் பெண் வாரிசுகள் யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். பெண் வாரிசுகளை விட்டுவிட்டு பாகப்பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பெண் வாரிசுகளை விட்டுவிட்டு எழுதியதால் 01.10.1993 தேதியிட்ட பாகப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் குடும்ப ஏற்பாடு மூலமாக பேசி பெண் வாரிசுகளின் சம்மதத்துடன் சொத்து பிரிக்கப்பட்டது. 1993 ல் எனக்கு 7 வயது. பாகப்பத்திரம் எழுதப்பட்ட சமயத்தில் என்ன விபரங்கள் நடைபெற்றது என்பது குறித்து எனக்கு தெரிந்துகொள்ளக்கூடிய வயது இல்லை என்றால் என் தகப்பனார் சொல்லி அந்த விபரங்கள் தெரியும். என் தகப்பனார் சொல்லி விபரங்கள் தெரியும் என எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை

என்றால் சரிதான். என் தகப்பனார் எந்த விபரங்கள் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாகப்பத்திரமே சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதால் அதன் அடிப்படையில் எழுதப்பட்ட மற்ற ஆவணங்களும் செல்லத்தக்க ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல. என் தகப்பனாரும், அவருடைய சகோதரரும் பெண் வாரிசுகளுக்கு உள்ள உரிமையை மறைத்து பாகப்பத்திரம் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் 01.10.1993 ம் தேதி எவ்வித குடும்ப ஏற்பாடும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 01.10.1993 தேதியிட்ட பாகப்பத்திரத்தில் பெண் வாரிசுகள் சாட்சிகளாகவும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். பெண் வாரிசுகளின் சம்மதத்துடன் பாகப்பத்திரம் எழுதப்பட்டிருந்தால் பெண் வாரிசுகள் சாட்சிகளாவது கையெழுத்து செய்திருப்பதார்கள் என்றாலும் பெண் வாரிசுகள் சம்மதம் இல்லாமல் எழுதப்பட்டதால் தான் அவர்கள் சாட்சிகளாக கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. 10.06.1997 தேதியில் மயில்சாமி கவுண்டர் உயில் எழுதியபோது நான் உடன் இல்லை என்றால் சரிதான். அதனால் அந்த உயில் மயில்சாமி கவுண்டர் எழுதினாரா, அவர் தான் கையெழுத்து செய்தாரா என எனக்கு நேரில் தெரியாது என்றால் என் தகப்பனார் சொல்லி தெரியும். மயில்சாமிகவுண்டர் உயில் எழுதிவைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 10.06.1997 தேதியிட்ட உயில்படி சொத்துக்கள் எங்கள் சுவாதீனத்தில் உள்ளதாக

சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. 10.06.1997 தேதியிட்ட உயில்சாசனம் மற்ற வாரிசுகளும் தெரியும் என சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. உயில் நடைமுறைக்கு வந்தபோது மற்ற வாரிசுகள் சம்மதம் தெரிவித்ததாக சொல்வது பொய் என்றாலும் மற்ற வாரிசுகள் யாரும் சம்மதம் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. 3, 12ம் பிரதிவாதிகள் தாவா சொத்தின் கூட்டு சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. கொங்கு வேளாளர் சமூக வழக்குப்படி பெண் வாரிசுகள் சம்மதத்துடன் பாகம் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைக்கு வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 01.10.1993 ம் தேதிய பாகசாசனமும் அதனை மூல ஆவணமாக கொண்டு எழுதப்பட்ட 10.06.1997, 27.12.2006 உயில்களும் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. பெண் வாரிசுகளான மயிலாத்தாள், தெய்வநாயகம், சின்னத்தாய் தாவா சொத்துக்களை அனுபவிக்கவில்லை என்றும், தாவா சொத்துக்களில் எவ்வித உரிமையும் கோரவில்லை என்றும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. பெண் வாரிசுகள் எல்லாரும் தாவா சொத்திலிருந்து வெளியேறிவிட்டதால் Ousted ஆகிவிட்டார் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. பெண் வாரிசுகளின் உரிமையை ஒத்துக்கொண்டதால் தான் அவ்வாறு சொல்கிறீர்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் 3, 12ம் பிரதிவாதிகளின் சொத்துக்களை பிரித்துக்கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

**3ம் பிரதிவாதி 12ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை தமதாக ஏற்றுக்கொள்கிறார்.**

<u>குறுக்குவிசாரணை</u>

தாவா சொத்துக்கள் அனைத்து என் தாத்தா ராமசாமி கவுண்டரின் சுயார்ஜித சொத்து என்றால் சரியல்ல, பூர்வீக சொத்தாகும். பூர்வீக சொத்து என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதியினுடைய தாய் வேலாத்தாள் என் தகப்பனாரின் சகோதரி என்றால் சரிதான். 01.10.1993 தேதிய குடும்ப ஏற்பாடு பத்திரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் குடும்ப ஏற்பாடு இல்லை என்றால் சரியல்ல, வாய்மொழியாக பேசி வைத்திருந்தோம். வாய்மொழியாக குடும்ப ஏற்பாடு செய்ததாக சொல்லியுள்ளது வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. குடும்ப ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் அதை பத்திரமாக பதிவு செய்திருப்போம் என்றாலும், குடும்ப ஏற்பாடு நடைபெறாததால் அவ்வாறு பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அதை மறைக்கவேண்டியே வாய்மொழி குடும்ப ஏற்பாடு நடைபெற்றதாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் செய்து கொண்ட வா.சா.ஆ.1 பாகப்பத்திரத்தில் பெண் வாரிசுகளை விட்டுவிட்டு பாகம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். குடும்ப ஏற்பாட்டின் அடிப்படையில் பாகப்பத்திரம் ஏற்பட்டதாக வா.சா.ஆ.1 ல் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் பெண் வாரிசுகளிடம் சாட்சி கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான். பெண் வாரிசுகளிடம் பாகம் குறித்து மறைத்து பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதியின் சொத்து

பாத்தியத்தை மறைத்து வா.சா.ஆ.1 எழுதப்பட்டதால் வா.சா.ஆ.1 பாகப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் சகோதரர் மயில்சாமி கவுண்டர் 10.06.1997 தேதியில் எழுதப்பட்ட உயில் சாசனம் எழுதுவதற்கு அவருக்கு சட்டப்படி சொத்து பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. நாற்புற எல்லைகளை குறிப்பிட்டு உயில்சாசனம் எழுத இயலாது என்றால் சரியல்ல. 10.06.1997 தேதியிட்ட உயில்சாசனத்தை தற்போது தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். உயில் சாசனத்தின் அசல் யாரிடம் இருந்தது என்ன காரணத்தினால் தாக்கல் செய்யவில்லை என்பது குறித்து நான் முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் என் அப்பாவிடம் இருந்தது. உயில் சாசனத்தின் அடிப்படையில் சொத்துக்கள் பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் என் பெயருக்கு மாற்றம் செய்துவிட்டோம், வழக்கு தாக்கல் செய்தபிறகு பெயர் மாற்றம் செய்தேன் என்றால் சரியல்ல, வழக்கிற்கு முன்பாகவே பெயர் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. நான் சொல்வதுபோல் ஒரு உயில்சாசனம் இல்லாததால் தான் மயில்சாமி கவுண்டர் இறந்தவுடன் பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் அப்போது நான் சிறுவனாக இருந்தேன், என் தகப்பனார் பார்த்து கொண்டிருந்ததால் எப்போது என் பெயருக்கு பெயர் மாற்றம் ஏற்பட்டது என தெரியவில்லை. என் பெரியப்பாவிற்கு உயிலில் உள்ள விகாதாசாரப்படி பாத்தியம் இல்லாததால் அது குறித்து அவர் எழுதிய உயில் செல்லாது என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி